# P.R.NO.626 DT.29.9.07

## மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை

## பத்திரிக்கை செய்தி

அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ஏதோ மர்ம நோய் பாதித்து வருவதாகவும், பொது மக்கள் ஒரே பீதியில் இருப்பதாகவும், அதிகமான மாணவர்கள் தொடர்ந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதாகவும், சில பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளில் செய்தி வெளியாகிக் கொண்டிருக்கிறது.

இந்த செய்தி உண்மை அல்ல. தற்சமயம் ஒரே ஒரு செவிலிய மாணவியும், இரண்டு மருத்துவ மாணவர்களும், கடந்த இரண்டு நாட்களாக சாதாரண காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்று தற்போது நலமடைந்து உள்ளனர். பாதுகாப்பு கருதி, தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு எந்த நிலையிலும் தீவிர சிகிச்சை தேவைப்படவில்லை.

தலைமைச்செயலாளர் 28.09.2007 அன்று சுகாதார துறை செயலாளர், மருத்துவ கல்வி இயக்குநர், மருத்துவ ஊரக நலப்பணிகள் இயக்குநர், பொது சுகாதார துறை இயக்குநர், சென்னையில் உள்ள மூன்று அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் தற்போதைய நிலவரம் குறித்து ஆய்வு நடத்தி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் விடுதி வளாகங்களை சுத்தமாக வைத்திருக்க தேவையான நடவடிக்கைக்களை உடனடியாக எடுக்கும்படி அறிவுருத்தியுள்ளார்.

மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் செவிலியர் மாணவ விடுதி வளாகங்களில் போர்க்கால அடிப்படையில் துப்பரவு பணி மற்றும் கழிவறைகள் சீரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

எனவே எந்தவிதமான மர்ம நோயும் பரவிவருவதற்கான அடிப்படை ஆதாரங்களும் இல்லை என்பதால் மக்கள் யாவரும் பீதி அடையத் தேவையில்லை என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ISSUED BY DIPR, CHENNAI-9